செ.வெ.எண்:37 நாள்:20.01.2018

# அரியலூரில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி மகளிருக்கான கோலப்போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 25.01.2018 அன்று நடைபெறவுள்ள தேசிய வாக்காளர் தினத்தையொட்டி, வாக்காளர்களுக்கு பல்வேறு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மகளிருக்கான கோலப்போட்டி (19.01.2018) அன்று நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் 6 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 16 சுயஉதவிக்குழுக்கள் கலந்துகொண்டு, வாக்காளர் தினம், அன்னை தெரசாவின் சமூக தொண்டு, மழைநீர் சேகரிப்பு, தனிநபர் இல்லக்கழிப்பறை, எய்ட்ஸ் தடுப்பு விழிப்புணர்வு, தூய்மை இந்தியா, மரம் வளர்த்தல், 18 வயது நிரம்பியோர் வாக்களிப்பதன் அவசியம் போன்ற பல்வேறு விழிப்புணர்வுகளை வலியுறுத்தும் வகையில் கோல ஓவியங்களை மகளிர்கள் சிறப்பாக வரைந்திருந்தனர்.

இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் **திரு.சே.தனசேகரன்** அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு, சிறந்த கோலங்களை தேர்வு செய்தார்கள்.

இதில் தேர்வு செய்யப்பட்ட மகளிருக்கு வருகின்ற 25.01.2018 ஆம் தேதி தேசிய வாக்காளர் தினத்தில் பரிசுகள் வழங்கப்படவுள்ளது எனவும், கோலப்போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மகளிர்களுக்கும் பாராட்டுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வழங்கல் அலுவலர் இ.கதிரேசன், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) அ.லலிதா, உதவி திட்ட அலுவலர்கள் ந.அனுஷியா, சீ.சரவணபாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.